இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 130 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மார்கழி 05 – சனிக்கிழமை 20 டிசம்பர் 2025 – மதுரை 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 130: Thiruvalluvar Year - 2056 - Margazhi 05 - Saturday 20 December 2025 - Madurai 16 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.12.2025) பேராசிரியர் அவர்களின் 103–வது பிறந்தநாளையொட்டி சென்னையில் உள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று, அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினிகள் உள்ளிட்ட கல்வி உபகரணங்களை வழங்கினார். உடன் கழக துணைப் பொதுச் செயலாளர் முனைவர் க. பொன்முடி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், பேராசிரியர் அவர்களின் புதல்வர் அன்புச்செல்வன், பேரனும் சட்டமன்ற உறுப்பினருமான அ. வெற்றி அழகன் மற்றும் பேராசிரியர் அவர்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.12.2025) பேராசிரியர் அவர்களின் 103வது பிறந்தநாளையொட்டி சென்னையில் உள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று, அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் கழக துணைப் பொதுச் செயலாளர் முனைவர் க. பொன்முடி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், பேராசிரியர் அவர்களின் புதல்வர் அன்புச்செல்வன், பேரனும் சட்டமன்ற உறுப்பினருமான அ.வெற்றி அழகன் மற்றும் பேராசிரியர் அவர்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### கொள்கை உறுதியும் கனிவும் நிறைந்த பேராசிரியர் பெருந்தகை ஊட்டிய

# திராவிட இனமான உணர்வோடு முன்செல்கிறேன்! கழகத்தின் தொடர் வெற்றிகளை அஞ்சலியாக உரித்தாக்குகிறேன்!

## இனமானப் பேராசிரியர் பிறந்தநாளில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, டிச.20-**

**இனமானப் பேராசிரியர் அவர்களின் 103வது பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், “கொள்கை உறுதியும் கனிவும் நிறைந்த பேராசிரியர் பெருந்தகை ஊட்டிய திராவிட இனமான உணர்வோடு முன்செல் கிறேன், கழகத்தின் தொடர் வெற்றிகளையே அவருக்கு என் அஞ்சலியாக உரித்தாக்குகிறேன்” என்று குறிப்பிட்டுள் ளார்.**

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

கழகம் எனும் கலத்தைப் புயல்கள் தாக்கியபோதெல்லாம்



தலைவர் கலைஞரின் பக்கத் துணையாய் நின்று கரைநோக்கிச் செலுத்திய பேராசிரியர் பெருந்தகையின் பிறந்தநாள்!

என்னை வளர்த்தெடுத்த கொள்கை ஆசான்களில் ஒருவர். நமது திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு புதிய உயரங்களை அடையும் ஒவ்வொரு தருணத்திலும் அவரது நினைவு என்னை ஆட்கொள்ளத் தவறியதில்லை.

கொள்கை உறுதியும் கனிவும் நிறைந்த பேராசிரியர் பெருந்தகை ஊட்டிய திராவிட இனமான உணர்வோடு முன்செல்கிறேன், கழகத்தின் தொடர் வெற்றிகளையே அவருக்கு என் அஞ்சலியாக உரித்தாக்குகிறேன்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### கிராமங்களின் பாதுகாப்பு அரணாகத் திகழ்ந்த - மகாத்மா காந்தி

# 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தை ஒரே இரவில் அழித்த மோடி அரசு!

## மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கடும் குற்றச்சாட்டு!

**புதுடெல்லி, டிச.20-**

**கிராமங்களின் பாதுகாப்பு அரணாகத் திகழ்ந்த, 20 ஆண்டுகால மகாத்மா காந்தி 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தை மோடி அரசு ஒரே இரவில் அடியோடு அழித்து விட்டதாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றம்சாட்டியுள்ளார்.**

VB-G RAM G திட்டம் என்பது 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தின் மறு சீரமைப்பு அல்ல, மாறாக கிராமப்புற வேலைவாய்ப்புகளை அழிக்கும் திட்டம் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கூறியுள்ளார். மாநிலங்களுக்கும், கிராமங்களுக்கும் எதிராக புதிய திட்டம் கொண்டுவரப் பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

100 நாள் வேலை திட்டம் கிராமப் புற தொழிலாளர்களுக்கு உரிமைகளை வழங்கியதுடன், நெருக்கடி சூழலில் நடக்கும் இடப்பெயர்வுகளை



குறைத்ததாகவும் சுட்டிக்காட்டினார். கிராமப்புற உட்கட்டமைப்பை மேம்படுத்தும் இத்திட்டத்தை சிதைக்கவே ஒன்றிய பாஜக அரசு விரும்புவதாக ராகுல் காந்தி கூறியுள்ளார்.

கொரோனா காலகட்டத்தில் பொருளாதாரம் முடங்கி, வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருந்தபோது, கோடிக்கணக்கான மக்களை பசியில் இருந்து பாதுகாத்ததுடன், கடனில் மூழ்கும் ஆபத்திலிருந்து காப்பாற்றிய திட்டம் தான் 100 நாள் வேலைவாய்ப்பு திட்டம் என்பதை அவர் நினைவு கூர்ந்தார்.

இத்திட்டத்தின் மூலம் பெரிதும் பயனடைந்த பெண்கள், பட்டியலின, பழங்குடியின மக்கள், நிலமற்ற தொழிலாளர்கள், ஏழை மக்களின் வாழ்வாதாரம் மேம்படுவதையும், அவர்கள் அதிகாரத்தை அடைய வதையும் ஒன்றிய பாஜக அரசு திட்டமிட்டு தடுப்பதாக ராகுல் காந்தி குற்றம்சாட்டியுள்ளார். கிராமப்புற மக்களின் பாதுகாப்பு அரணாக திகழும், மகாத்மா காந்தி 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தை மீண்டும் செயல்படுத்த மாநிலங்களுடன் ஒன்றிணைந்து நாடு தழுவிய அளவில் முன்னெடுப்புகள் நிச்சயம் எடுக்கப்படும் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உறுதியளித்துள்ளார்.

### 100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் நாசகாரச் செயலையும் – ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து

# டிசம்பர் 24 - அன்று ‘மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!’

## மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் தலைநகர் சென்னை - அனைத்து ஒன்றியங்களிலும் நடைபெறுகிறது!

**சென்னை, டிச. 20-**

**100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தியும் - சட்டத்தைக் கொண்டுவந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் - அதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து தலைநகர் சென்னையிலும் - மாநிலத்தில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் சார்பில் டிச.24- புதன்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.**

இந்த ஆர்ப்பாட்டம் குறித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் அறிக்கை வருமாறு:-

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தை சிதைத்து, அதன் திட்டப் பணிகளை சீர்குலைத்து, நிதி ஒதுக்கீட்டை குறைப்பது, மாநிலங்களின் நிதிச்சுமையை அதிகரித்து திட்டத்தை முடக்குவது, வேலைநாட்களை குறைப்பது, பயனாளிகளின் எண்ணிக்கையை குறைப்பது, **‘கிராமங்கள் தான் நம் நாட்டின் முதுகெலும்பு’ என்ற அண்ணல் காந்தியடிகளின் பெயரை நீக்குவது, இந்தியை திணிப்பது** என சட்டத்தை திருத்தியும் – நூறு நாள் வேலையையே இனி இல்லாமல் செய்து **கிராம மக்களின் வாழ்வாதாரத்தில் அடிக்கத் துடிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் நாசகார சதிச் செயலையும்** – அதற்கு ஒத்து ஊதி தமிழ்நாட்டு மக்களுக்குத் துரோகம் செய்யும் அ.தி.மு.கவையும் கண்டித்தும், சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தியும் **‘மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி’ சார்பில் 24.12.2025 புதன்கிழமை அன்று காலை 10.00 மணியளவில், தலைநகர் சென்னையிலும் - மாநிலத்தில் உள்ள அனைத்து கழக ஒன்றியங்களிலும் 100 நாள் வேலைவாய்ப்பினால் பயன்பெறுவோரைத் திரட்டி “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்”** நடைபெறும்.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், மாவட்டச் செயலாளர்கள் – நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் – மாநில நிர்வாகிகள் தலைமையில் மாவட்ட நிர்வாகிகள் – ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள் - நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மதச் சார்பற்ற கூட்டணிக் கட்சியைச் சார்ந்த அனைத்து கூட்டணி அமைப்புகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்கின்ற வகையில், மாவட்ட கழகச் செயலாளர்கள் உரிய ஏற்பாடுகளைச் செய்து, தமிழ்நாடு மக்களை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசையும் – ஒத்து ஊதும் அ.தி.மு.க.வைக் கண்டித்தும் முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஒழிக! ஒழிக!** G RAM G **சட்டம் ஒழிக!**

**தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!**

இவ்வாறு மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் சார்பில் அறிவிக்கப் பட்டுள்ளது.